# வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை

## வவுனியா மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 28 பெப்ரவரி 2020 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 22 ஜுன் 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 22 ஜுலை 2020 ஆந் திகதியும் சபையின் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதும் நிலையினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 134,070,423 பெறுமதியான நிலையான சொத்துக்களில் காணிகளின் பெறுமதி தனியாக காட்டப்பட்டிருக்கவில்லை என்பதுடன் பெறுமானத்தேய்வு மேற்கொள்ளவேண்டிய சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். | சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்த பின்னர் பெறுமானத்தேய்வு தொடர்பில் பதிவுகள் மேற்கொள்ளப்படும் |

#### (ஆ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 78,344,357 பெறுமதியான காணி கட்டிடங்களுக்கு காணி உரிமைப்பத்திர சான்றுகள் எவையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணி கட்டிடங்களுக்கு உரிமப் பத்திர சான்றுகள் பெறுவதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 93 ஆம் பிரிவுகள் | சபையினால் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளின்படி கழிவு முகாமைத்துவ செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | வாகன வசதி மற்றும் ஆளணி குறைவாக உள்ளமையால் பெருந்தொகையில் குப்பைகளை சேகரிக்க முடியாமல் உள்ளது. |
| (ஆ) | 1952 இன் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகளின் நிறைவேற்றப்பட்ட இடைக்கால சட்ட ஏற்பாடுகளின் XI மற்றும் XII ஆம் பகுதிகள் | திண்மக் கழிவு முகாமைத்துவ தொடர்பில் வருடாந்தம் திட்டமொன்று சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த திட்டத்தினுள் கழிவு முகாமைத்துவம் உள்ளடக்கப்படல் வேண்டும் | திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் வருடாந்தம் திட்டமொன்று உருவாக்கி செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (இ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் | திண்ம கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | அதிகாரச்சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும் | இது தொடர்பாக எதிர்வரும் காலங்களில் கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக ஒழுங்கு விதிகள் | | | |
| (i) | விதி இலக்கம் 32 | மீளாய்வாண்டிற்கான ஆதன வரி மதிப்பீடு தொடர்பான மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்காமை | பிரதேச சபைகளின் ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்படல் வேண்டும் | சபையின் ஆதனங்களின் பெறுமதி மதிப்பிடப்படும் சந்தர்ப்பத்தில் பதிவேடு பேணப்பட நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ii)** | விதி இலக்கம் 33 | சோலை வரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | பிரதேச சபைகளின் ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்படல் வேண்டும் | விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் உதவி கிடைக்கப்பெற்றதும் ஆதனவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் |
| **(iii)** | விதி இலக்கம் 218 | காணிகள் கட்டடங்கள் யாவும் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு முறை தவிசாளரினால் சோதனை செய்விக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகளின் ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்படல் வேண்டும் | சோதனை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| **(உ)** | மாகாண நிதி ஒழுங்குவிதி 163.3 | முற்பண நிலுவைகள் ரூபா 12,999 வினை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிதி ஒழுங்குவிதிக்கு அமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,431,734 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,723,209 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசிறை கடனாளிடம் இருந்து பெறவேண்டிய ரூபா 8,022,674 வினை 31 திசெம்பர் 2019 வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எதுவும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை | அரசிறை கடனாளிகளிடம் இருந்து பெற வேண்டிய தொகையினை அறவிட சபையினால் உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். | நிலுவைகள் அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது |

| வருமான மூலம் | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | - | - | - | - | - | - | - | - |
| (ii) | வாடகைகள் | 10,025,675 | 11,150,640 | 9,372,356 | 1,778,284 | 9,022,175 | 9,223,458 | 7,959,558 | 1,263,900 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,571,500 | 1,441,665 | 1,441,665 | - | 876,550 | 913,155 | 913,155 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 5,406,500 | 3,664,067 | 3,664,067 | - | 6,983,500 | 7,069,704 | 2,943,919 | 4,125,785 |
| | **மொத்தம்** | **18,003,675** | **16,256,372** | **14,478,088** | **1,778,284** | **16,882,225** | **17,206,317** | **11,816,632** | **5,389,685** |

### 2.2.3 வாடகைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் எல்லைக்குட்பட்ட வாகன வாடகை நிலுவைகள் ரூபா 1,433,837 கடந்த 04 வருடங்களாக அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவை வாகன வாடகையை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் | சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |
| (ஆ) | சபையின் எல்லைக்குட்பட்ட கடைகளின் குத்தகை நிலுவை ரூபா 193,073 கடந்த 02 வருடங்களாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடை வாடகையினை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் | சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் பிரிவு 47 இன் பிரகாரம் கட்டடத்தை அமைக்க முன் பிரதேச சபையின் அனுமதி பெறப்படல் வேண்டும் இருந்தபோதிலும் 3,208 வீட்டுத்திட்டங்கள் பிரதேச சபையினது எல்லைக்குள் இடம் பெற்றிருந்த போதிலும் சபையினால் கட்டட அனுமதிகள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை | பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் படி செயற்பட வேண்டும் | கட்டிட அனுமதி வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் |

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,397,366 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நீதிமன்ற தண்டப்பணங்கள் பெற உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் | நீதிமன்ற தண்டப்பணம் உரிய ஆண்டில் எம்மால் கோரப்பட்டும் எமக்கு இதுவரை கிடைக்கவில்லை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 28 முக்கிய விடயங்கள் தொடர்பில் உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் 19 விடயங்கள் தொடர்பில் உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், முக்கிய விடயங்கள் தொடர்பில் உப விதிகள் உருவாக்கப்படல் வேண்டும் | வடக்கு மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்ட அத்தியாயம் I-IX வரையான துணை விதிகள் எமது சபையாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஏனைய விடயங்கள் தொடர்பில் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும் | சபையின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

**(இ) பணிகளை நிறைவேற்றலின் தாமதங்கள்**

பின்வரும் செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| இல. | செயற்பாடுகள் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்க வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | ரூபா | - |
| 1. | சபை வீதிகள் திருத்தம் | 1,300,000 | 20.11.2019 | 23.12.2019 | 1,145,686 | போதிய வருமானமானது தாமதமாகக் கிடைக்கப்பெற்றமையும் அதன பின்னரான மழைக்காலநிலையும் |
| 2. | சபை தார் வீதிகள் திருத்தம் | 1,000,000 | 20.11.2019 | 30.11.2019 | 997,781 | போதிய வருமானமானது தாமதமாகக் கிடைக்கப்பெற்றமையும் அதன பின்னரான மழைக்காலநிலையும் |
| 3. | சபை கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் திருத்தம் | 800,000 | 01.01.2019 | 28.03.2019 | 12,005 | போதிய வருமானமானது தாமதமாகக் கிடைக்கப்பெற்றமை |
| 4. | சபை காணி பராமரிப்பு | 300,000 | - | - | - | போதிய வருமானமானது தாமதமாகக் கிடைக்கப்பெற்றமை |
| 5. | PSDG - வேலைகள் | 15,770,000 | 01.04.2019 | 21.05.2019 | 13,060,738 | நிதி ஒதுக்கீடு தாமதமாக வழங்கப்பட்டமை |
| 6. | சபைக்குச் சொந்தமான கட்டடம் அமைத்தல் | 1,500,000 | - | - | - | போதிய வருமானமானது தாமதமாகக் கிடைக்கப்பெற்றமை |
| 7. | CBG - வேலைகள் | 500,000 | - | - | - | நிதி ஒதுக்கீடு வழங்கப்படாமை |
| 8. | பொதுக்கிணறு மற்றும் குழாய்க்கிணறு அமைத்தல் | 300,000 | - | - | - | போதிய வருமானமானது தாமதமாகக் கிடைக்கப்பெற்றமை |
| 9. | சுடுகாடு, இடுகாடு மற்றும் விளையாட்டு மைதான திருத்தம் | 300,000 | 13.08.2019 | 23.12.2019 | 300,000 | போதிய வருமானமானது தாமதமாகக் கிடைக்கப்பெற்றமையும் அதன் பின்னரான மழைக்காலநிலையும் |

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

திண்மக் கழிவுகள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | குப்பைகளை அகற்றுவதற்காக காணப்படுகின்ற இடங்களிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை | பொருத்தமான முறையில் திண்மக் கழிவு முகாமைத்துவம் தயாரிக்கப்பட்டு கழிவுகள் வெவ்வேறாக ஒழுங்குப்படுத்தி மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக்கு உட்படுத்தி சூழலுக்கு பாதிப்படையாதவாறு செயற்படுத்தி இயற்கை உரம் தயாரித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளபடல் வேண்டும். | உரிய இடத்திற்கு அனுமதி பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்படுவதில்லை | | குப்பைகளை வெவ்வேறாக பிரித்து சேகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (iii) | சபையின் குப்பைகளை கொட்டும் இடங்களிற்கு கொண்டுவரப்படுகின்ற குப்பைகளை வகைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படவில்லை | | நிதி மூலங்கள் மற்றும் வாகன வசதி கிடைக்கும் போது குப்பைகளை வகைப்படுத்துவதற்கான திட்டமொன்றை அமைக்க முடியும் |
| (iv) | சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள கடைகள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தி உறைகளில் இட்டு எடுத்து செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | இனி வரும் காலங்களில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உத்தியோகத்தர்களிற்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பொருத்தமான ஒப்பந்தகாரரினை நியமிக்காததினால் நீதிமன்ற செலவாக ரூபா 927,904 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | பொருத்தமான ஒப்பந்தகாரரினை நியமிக்கநடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வேலை தொடர்பான பிரச்சினைகள் காரணமாக கௌரவ ஆளுநரின் பணிப்பின் பெயரில் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டமையால். ஒப்பந்ததாரர் வழக்கு தாக்கல் செய்திருந்தமையினால் ஏற்பட்ட வழக்கிற்கான அலுவலக ரீதியான செலவே இதுவாகும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வடமாகாண பிரதிப்பிரதம செயலாளரின் (நிர்வாகம்/ஒழுக்காற்று அதிகாரி) 2017 மார்ச் 09 ஆந் திகதிய NP/02/7/IN/24 இலக்கமுடைய ஒழுக்காற்று நடவடிக்கையின் பிரகாரம், சபையின் முன்னைய பதில் செயலாளரினால் ரூபா 1,573,039 பெறுமதியான தொகை 31 திசெம்பர் 2017 ஆந் திகதிக்கு முன்னர் சபைக்கு செலுத்தப்பட வேண்டிய போதிலும் 31 திசெம்பர் 2019 வரை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | உரிய காலத்தில் அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பில் சபையால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு கௌரவ ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மீள் விசாரணை செய்யக்கோரி பிரதிப் பிரதம செயலாளர் அவர்களால் 07.05.2019 இல் உள்ளுராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) | சபையின் பாவனையிலுள்ள வாகனங்களுக்கான மீளாய்வாண்டிற்கான வருமான வரி பத்திரம் பெற்றுக்கொள்ளும் போது 08 வாகனங்களுக்காக ரூபா 3,265 தண்டப்பணங்கள் செலுத்தப்படடிருந்தது.. | உரிய காலத்தில் வாகன வரி அனுமதிப்பத்திரம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து தண்டப்பணங்கள் அறவிடப்படல் வேண்டும். | வாகனங்கள் உரிமை மாற்றம் செய்ய அனுப்பி கிடைக்காத காரணத்தினாலும் சில வாகனங்கள் பழுதடைந்து காணப்பட்டமையாலும் அவற்றிற்கான தண்டப்பணங்கள் செலுத்தப்பட்டது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**3.3.1 பதவி வெற்றிடங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் 26 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை | உரிய காலத்தினுள் ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும் | வட மாகாண பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாகம் அவர்களிடம் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் NP VB 0525 இலக்க மோட்டார் சைக்கிளானது 28 திசெம்பர் 2016 ஆந் திகதி பூரணமாக ரூபா 89,295 செலவில் திருத்தப்பட்டு மீண்டும் 21 செப்டம்பர் 2017 ஆந் திகதி பழுதடைந்து பாவனைக்குட்படுத்த முடியாமல் காணப்பட்டிருந்ததுடன், | மேலதிக கட்டணமாக அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | இவ்வாகனமானது 2019 ஆம் ஆண்டு திருத்தப்பட்டதன் பின்பு மீண்டும் பழுதடைந்த காரணத்தினால் ஏற்கனவே திருத்திய கராஜிற்கு கொண்டு சென்று கொடுப்பனவு இன்றி திருத்தப்பட்டு தற்போது பாவனையில் உள்ளது. |

மீண்டும் 2019 ஆம் ஆண்டு ரூபா 29,650 செலவில் திருத்தப்பட்டிருந்தபோதும் நாளதுவரை பயன்படுத்த முடியாத நிலையிலேயே காணப்படுகிறது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பாவனைக்குட்படுத்தாத 08 வாகனங்களினை உரிய நடைமுறையை பின்பற்றி பாவனையில் ஈடுபடுத்துவதற்கு நாளதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பாவனைக்கு ஏற்ற வகையில் திருத்துவதற்கு அல்லது அழிப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் | திருத்துவதற்கு அல்லது அழிப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபையினால் ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்காக 2017 ஆம் ஆண்டு மே மாதம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 29,236 பெறுமதியான 02 நோயாளர் படுக்கைகளானது 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை பாவனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் | பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | சபையின் வளாகத்தில் காணப்படும் சிறுவர் பூங்காவானது கடந்த 07 வருடங்களுக்கு மேலாக பாவனையின்றியும் பராமரிப்பின்றியும் காணப்பட்டதுடன் சிறுவர் பூங்காவினை பயன்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை | சிறுவர் பூங்காவினை பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் | குறித்த சிறுவர் பூங்காவினை பராமரித்து பாவனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய காணிகள் தொடர்பாக வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை அவ்வாறே சபைக்கு உரித்தான காணிகள் மெய்மையாய்வு செய்யப்பட்டு அவை தொடர்பிலான உரிமையை உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | காணிகளுக்கான உரிமைப்பத்திரம் பெற நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் | காணிகளுக்கான உரிமைப்பத்திரம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | சபையின் பயன்பாட்டில் காணப்படும் 09 வாகனங்களின் உரிமையானது பிரதேச சபையின் பெயருக்கு மாற்றம் செய்யப்படாமையினால் இவற்றின் பயன்பாட்டின் பயன்மிகுதன்மை, ஏனைய திருத்தங்கள் மற்றும் பராமரித்தல் செலவுகள் என்பவற்றினைத் திருப்திகரமாக கணக்காய்வில் ஏற்று உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | 09 வாகனங்களையும் சபையின் பெயருக்கு உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உரிமை மாற்றம் செய்யப்படாத வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

### 3.5.3 விளைவற்ற/குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் கடைத்தொகுதிகளின் கட்டிடங்கள், சிறுவர் பூங்கா மற்றும் நூலக கட்டிடம் என்பன பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் அவற்றினை பயன்படுத்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்க்கான பாதீட்டு வருமான மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்காமலும் மதீப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு | பாதீடானது வினைத்திறனான கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும் | ஆளுக்குரிய வரும்படிகளுக்கான பாதீட்டு வருமான மதிப்பீடானது அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஆளணியினருக்கான செலவினத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சிப்படுத்தாமையுமே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 180,255 தொடக்கம் ரூபா 3,850,576 வரையான வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | | அடிப்படையிலான மீள்கட்டுநிதி அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகின்றது. 2019 இல் நிரப்பப்படாத ஆளணியினருக்கான மீள்கட்டுநிதி பெறுமதியே 3,850,576 வேறுபாட்டுத் தொகையாக உள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டிற்க்கான பாதீட்டு செலவின மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்காமலும் மதீப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையுமே பாதீட்டு செலவினத்திற்கும் உண்மை செலவினத்திற்கும் இடையே ரூபா 8,000 தொடக்கம் 4,754,349 வரையான வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | பாதீடானது வினைத்திறனான கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும் | ஆளுக்குரிய வரும்படிகளுக்கான பாதீட்டு மதிப்பீடானது அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஆளணியினருக்கான செலவினம் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகின்றது. 2019 இல் நிரப்பப்படாத ஆளணியினருக்கான செலவினத்துடன் நிரப்பப்படாத ஆளனியினருக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு, சீருடைப்படி மற்றும் பயிற்சியாளருக்கான கொடுப்பனவுகளின் பெறுமதியே 4,754,349 வேறுபாட்டுத் தொகையாக உள்ளது. |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்காக உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டுள்ள போதும் மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | உள்ளக கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | உள்ளக கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட விடய உத்தியோகத்தர்களுக்கு முன்னளிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |